**ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்.**
**வினா விடை நேரம்.**

**வினா எண் 325.**
**தலைப்பு "மன கதவை திறந்து வைப்பது"**

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் இரண்டு பக்கம் 203-209லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:ஸ்வாமி ஞானம் என்றால் எதையும் முழுமையாக அறிந்துகொள்வது என தாங்கள் கூறுவது எங்களுக்கு புரிகிறது. முழுமையாக அறிந்து கொள்ளும் திறமையை நாங்கள் எவ்வாறு வளர்த்துக்கொள்வது ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
ஆன்மீக பயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் மட்டுமேயன்றி வேறு எந்த வழியிலும் அதை பெற முடியாது.இல்லை என்றால் அது வெறும் புத்தக அறிவாக போலி அறிவாக பொது அறிவாக மட்டுமே இருக்கும். முற்றிலுமாக அறிந்து கொண்டதாக ஆகாது.
விதையை நிலத்தில் விதைத்தால்தானே செடி முளைக்கும்.
விதையை பாத்திரத்தில் போட்டு மூடி வைத்தால் செடி முளைக்குமா.
ஆன்மீக பயிற்சிகளினால் மட்டுமே ஞானம் பெற முடியும். அதுவே உண்மை ஞானமாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி இந்த ஞானம் என்பது கல்விசாலைகளில் கற்பதன் மூலம் பெற முடியாது என புரிகிறது. ஸ்வாமி தாங்களே இறையாகிய பரம் பொருளன்றோ.தாங்களே ஞானம் என்ற வரத்தை எங்களுக்கு உடனடியாக தந்தருளுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:கடவுளே அனைத்தையும் செய்து விட்டால் பிறகு நீங்கள் செய்வதற்கு என்ன இருக்கிறது.
கடவுள் உங்களுக்கு வரமாக கொடுத்திருக்கின்ற புத்தியை-பகுத்தறிவை நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டாமா.
அவற்றை நீங்கள் வீணடிப்பீர்களா.
தாய் குழந்தைக்கு உணவு சமைத்து பரிமாறத்தான் முடியும்.அவரே குழந்தைக்காக உணவு உண்ண முடியுமா.
குழந்தை அடிபட்டுக்கொண்டால் தாய் வருந்தலாம்.ஆனால் பேண்டேஜயும் அவரே போட்டுக் கொண்டால் குழந்தையின் காயம் ஆறிவிடுமா.

தட்டிலுள்ள சப்பாத்தி சப்ஜியை நீங்களே கையில் எடுத்து வாயில் போட்டுக் கொள்ள வேண்டும்.
மாறாக ஒன்றும் செய்யாமல் சப்பாத்தி சப்பாத்தி என்று கூவி கொண்டிருந்தால் பசி அடங்கி விடுமா.அது போல் ஞானம் என்ற உயரிய பொக்கிஷத்தை பெறுவதற்கு நீங்கள் உங்கள் மனம் மற்றும் புத்தியை ஆன்மீக பயற்சிகளில் முறையாக முழுவதுமாக ஈடுபடுத்தி கொண்டே இருக்க வேண்டும்.
க்ரிஷி விடாமுயற்சியினால் நீங்கள் ரிஷி முனிவராக ஆக முடியும். எப்போதும் இறைவனை மனதில் நினைத்தவாறு உங்கள் அன்றாட கடமைகளை செய்து வாருங்கள்.
ஓ அர்ஜுனா என்னை நினைத்தபடியே யுத்தம் செய்வாயாக என பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உரைக்கின்றார்.
ஸ்ரீ ராம நாமத்தை உசசரித்த வண்ணம் ஆஞ்சநேய ஸ்வாமியால் சமுத்திரத்தையே தாண்ட முடிந்தது அல்லவா.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி ஆன்மீக பயற்சிகள் என்பது உபவாசம்,உண்ணாநோன்பு,உறங்காதிருத்தல் இவைகளை கடைபிடிப்பதாக உள்ளது.இவைகளின் முக்கியத்துவம் பற்றி தாங்கள் எங்களுக்கு விளக்கி சொல்ல வேண்டுகிறோம் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
பாரத தேசத்தின் தொன்று தொட்ட சடங்கு சம்பிரதாயங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் பொருள் பொதிந்த அர்த்தங்களும் முக்கியத்துவமும் இருக்கவே செய்கின்றன.
ஆன்மீக சாதகர்கள் சந்தேகமில்லாமல் தெய்வீக அனுபவங்களை பெறுகிறார்கள்.ஆனால் இன்றைக்கோ பக்தி பகட்டுக்கானதாக மாறி அதனுடைய முக்கியத்துவத்தை இழந்து நிற்கின்றது.
இலக்கை விட்டு வெகுதூரம் விலகிப்போய் பக்தி வெறும் சம்பிரதாயமாக,இயந்திரதனமாக மாறி இருக்கிறது. எனவே இன்றைக்கு சடங்கு சம்பிரதாயங்களை முறையாக அனுசரிப்பவர் எவரும் இல்லை.மனிதனின் இத்தகைய மனப்பாங்கு மாற வேண்டும்.
நீங்கள் ஒரு நீண்ட பயணம் மேற்கொள்கிறீர்கள்.வழியில் உண்பதற்கு உணவு கிடைக்கவில்லை.இதை உபவாசம் என சொல்லி விட முடியுமா.நோய்வாய் பட்டால் உணவு செல்லாது.அது உபவாசம் ஆகி விடுமா.இவற்றால் ஏதேனும் ஆன்மீக பயன் விளையுமா.
உப என்றால் அருகில்.வாச என்றால் வசித்தல்.உபவாசம் என்றால் கடவுளிடம் நெருங்கியிருத்தல் என பொருளாகும்.அதாவது புறத்தை விடுத்து உள் உறையும் கடவுளை அகத்திலே காண்பதே உபவாசமாகும்.
ஏகாதசி அன்று உபவாசம் இருக்கிறார்கள்.ஆனால் சேர்த்து வைத்து மறுநாள் இரண்டு மடங்கு உண்கிறார்கள்.மத்வாசாரியாரை பின்பற்றுகின்ற மாத்வர்கள் பீஷ்ம ஏகாதசி அன்று உபவாசம் இருப்பதுடன் எச்சில் கூட முழுங்காமல் விரதம் அனுசரிக்கிறார்கள்.

ஜாகரணா என்றால் விழிப்புடன் இருத்தல் என்று அர்த்தமாகும்.இரவு முழுவதும் கண் விழித்திருத்தல் என்பதல்ல.உலகியலான பற்றுகள் புலன் இன்பங்கள் சௌகரியங்களிலிருந்து விலகியிருத்தல் என பொருளாகும்.இவைகளிலிருந்து விலகி இருப்பதுடன் உள்ளே உள்ள ஆத்மாவுடன் நெருங்கி இருக்க வேண்டும்.

ஆனால் இன்றைக்கோ இரவு விழித்திருப்பதாக சொல்லி சீட்டு கட்டு ஆடுகிறார்கள், சினிமா பார்க்கிறார்கள்.

ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற செவிலியரோ மருத்துவரோ ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டரோ கூட இரவில் கண் விதிக்கிறார்கள்.அது ஜாகரணம் ஆகி விடுமா. எனவே சடங்கு சம்பிரதாங்களின் அர்த்தம் தெரிந்து முறையாக அவற்றை கடைபிடிக்க வேண்டும்.இல்லாவிட்டால் அடுத்தவர்கள் பரிகசிக்கும் விதமாகத்தான் அவை இருக்கும்.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி ஜபம் தியானம் பூஜை பாராயணம் இது போன்ற பல்வேறு ஆன்மீக பயிற்சிகளில் மிக சிறந்தது எது என்பதை எங்களுக்கு கூறி அருளுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:

ப்ரேமை மற்றும் மனத்தூய்மை

யுடன் தன்னலம் கருதாது முழுவதுமாக இறைவனிடத்திலே சரணாகதி செய்து எந்த ஒரு ஆன்மீக பயிற்சியில் ஈடுபட்டாலும் தெய்வீகத்தை உணர்ந்து அனுபவிக்க முடியும்.உங்களுக்கு எது இலகுவாக கை வருகின்றதோ அதை பின்பற்றலாம்.எதில் உங்களுக்கு ஆனந்தமும் அமைதியும் கிடைக்கின்றதோ அதில் முழுமனதுடன் ஈடுபடலாம்.

ஆனால் மற்றவர்களின் வழியை நீங்களும் காப்பியடிக்க வேண்டாம். உங்களுக்கு பொருந்துகிற பாதையை நீங்களே தேர்ந்தெடுங்கள்

ஒரு மாம்பழ கடைக்காரர் கடை வாசலில் இங்கே நல்ல மாம்பழங்கள் விற்கப்படுகிறது என எழுதியிருந்தார்.கடைக்கு வந்த ஒருவர் இங்கே என்று எழுதியது தவறு.இந்த சந்தை முழுவதும் பழங்கள் தானே விற்கப்படுகின்றன என்றார்.அதை கேட்டு கடைகாரர் இங்கே என்ற வார்த்தையை அழித்து விட்டார்.மற்றொருவர் வந்து இந்த இடமே மாம்பழ சந்தைதானே.

எல்லா கடைகாரர்களும் மாம்பழம் மட்டும் தானே விற்கிறார்கள்.மாம்பழம் என்று எழுதினால் தான் தெரியுமா என்று கேட்க இவரும் மாம்பழம் என்ற வார்த்தையை அழித்து விட்டு நல்ல பழங்கள் விற்கப்படுகிறது என எழுதினார்.இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொல்ல இறுதியில் கடைக்காரர் தான் எழுதியது அனைத்தையும் அழிக்கும்படி ஆயிற்று.சுய புத்தியுடன் யோசித்து செயல் படாமல் மற்றவரின் பேச்சை காப்பியடித்து செயல் பட்டால் இந்த நிலை தான் ஏற்படும்.

உங்கள் குரு உங்களுக்கு ஒரு வழியை கூறுகிறார். ஆனால் அனைவரைக்கும் அவர் அதே வழியை போதிப்பதில்லை.

ஆன்மீக பயற்சி என்பது அவரவருடைய தகுதி திறமை ஆன்மீக புரிதல் இவைகளை பொறுத்ததாகும்.

அனைவருக்கும் நன்றி.

வர இருக்கின்ற நாட்களில் நம் ஸ்வாமியின் அருளைரைகளை மேலும் கேட்டு மகிழ்வோம்

ஜெய் சாயிராம்.